Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 182 | வியாழக்கிழமை | வைகாசி 12 ஆம் நாள் 27 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 15 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கிளிநொச்சி சாலையில் 9 பேருக்கு தொற்று

கிளிநொச்சி, மே 27
இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையில் 9 பேருக்கு கொரோனாத்

02 >

## 45 பேருக்கு வடக்கில் தொற்று

யாழ்ப்பாணம், மே 27
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமாலை 713 பேரின் மாதிரிகள் சோதனைக்கு

02 >

## 2,325 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, மே 27
நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 325 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்

02 >

## மருத்துவர், தாதியருக்கு பளையில் கொரோனா

பளை, மே 27
பளை மருத்துவமனையில் கடமையாற்றும், மருத்துவர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு

02 >

## திருட்டு முயற்சி; இருவர் துரத்திப்பிடிப்பு

யாழ்ப்பாணம், மே 27
நாடு முடக்கப்பட்டிருக்கும் நிலையில், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் ஒன்றில் திருட்டு

02 >

### எகிறுகின்றது கொரோனா

# காரைநகரில் ஒரு பகுதி முடக்கப்படுகிறது?

**தடுப்பு நிலையத்திடம் யாழ்.செயலகம் கோரிக்கை**

யாழ்ப்பாணம், மே 27
யாழ்ப்பாணம் காரைநகரில் ஒரு கிராமத்தை தனிமைப்படுத்துவதற்கு அனுமதி கோரி, கொரோனாத் தடுப்பு மத்திய நிலையத்துக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

02 >



## காய்ச்சலால் சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், மே 27
மூன்று நாள்களாக காய்ச்சலுடன் கடும் உடல் சோர்வு அறிகுறிகள் காணப்பட்ட சிறுவன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று அதிகாலை

02 >

### கடும் காற்றுக் காரணமாக

## 71 குடும்பங்களைச் சேர்ந்த 241 பேர் யாழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 27
கடும் காற்றுடன் கூடிய காலநிலையின் தாக்கம் காரணமாக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 71 குடும்பங்களைச் சேர்ந்த 241 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா தெரிவித்தார். கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்

02 >

## அந்நிய சக்திகளின் நடவடிக்கைக்கு தாயக மக்களின் சம்மதம் வேண்டும்

*நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, மே 27
தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல, நிலத்தை அண்டிய கடலிலும் உண்டு என்ற நிலையில் எந்தவோர் அந்நிய சக்திகளின் நடவடிக்கைகளுக்கும் தாயக மக்களின் சம்மதம் பெறப்பட

02 >

## காட்டிக்கொடுக்கும் 'ட்ரோன்' யாழ்ப்பாணத்தில் 10 பேர் கைது



யாழ்ப்பாணம், மே 27
'ட்ரோன்' கமராவின் கண்காணிப்பின் மூலம், யாழ்ப்பாணத்தில் நேற்று 10க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்த

14 >



### சட்டமா அதிபராக

## பதவியேற்றார் சஞ்ஜெய் ராஜரத்னம்

கொழும்பு, மே 27
புதிய சட்டமா அதிபராக, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜெய் ராஜரத்னம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இவர் நாட்டின் 48ஆவது சட்டமா அதிபரா

14 >

## ஆயுள் தண்டனை கைதிகள் 247 பேருக்கு மன்னிப்பு

*தூக்குத் தண்டனைக்கும் மாற்றுவழி*

கொழும்பு, மே 27
ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 247 கைதிகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். அவர்களில் 53 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள கைதிகள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள். இவ்வாறு சிறைச்சாலைகள்

02 >

வாசகர்களே! உதயன் + சஞ்சீவி

ஞாயிறு உதயன் நாளிதழ், சஞ்சீவி வார இதழ் என்பன

எதிர்வரும் (31.05.2021) திங்கட்கிழமை நாளிதழோடு மேலதிகமாக வெளிவரும்

ஞாயிறு உதயன் + சஞ்சீவி 40/=

திங்கள் உதயன்- ரூபா 30/=

முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0716182182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காரைநகரில்....

ஜே/47 கிராம அலுவலர் பிரிவு உள்ளடங்கிய கிராமத்தையே தனிமைப்படுத்த வேண்டியுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குறித்த பகுதியில் அதிக அளவிலான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து அந்தப் பகுதியை முடக்குவதற்கான விண்ணப்பத்தை மாவட்டச் செயலகத்துக்கு சுகாதாரப் பிரிவினர் அனுப்பியுள்ளனர்.

குறித்த விண்ணப்பம் மாவட்டச் செயலகத்தால் சிபாரிசு செய்யப்பட்டு அனுமதி கோரி மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், அந்தப் பகுதியைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு இடர்கால நிவாரண உதவியும் வழங்கப்படவுள்ளது என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-20,26)

## கிளிநொச்சி...

தொற்று உறுதியாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜென் சோதனையில் மேற்குறித்த 9 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## 45 பேருக்கு...

உட்படுத்தப்பட்டதில் 23 பேருக்கும், நேற்றுமுன்தினம் இரவு 196 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 22 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம், 191 பேரின் மாதிரிகள் மீளவும் பரிசோதிக்கப்பட வேண்டியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாண மாவட்டம்**

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 8 பேருக்கும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் இருவருக்கும் என்று 28 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி மாவட்டம்**

அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 4 பேருக்கும் என்று 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு மாவட்டம்**

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார் மாவட்டம்**

பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், முருங்கன் ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும் என்று 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா மாவட்டம்**

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 4 பேருக்கும் என்று 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## 2325....

பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 72 ஆயிரத்து 225 ஆக எகிறியுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 38 ஆயிரத்து 622 ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 334 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## மருத்துவர்...

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப 9)

## திருட்டு....

முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விற்பனை நிலையத்தின் பின்பகுதியால் உள்ளே இறங்கி தண்ணீர் மோட்டரையும் வாகன உதிரிப் பாகங்களையும் திருடும் முயற்சியில் குறித்த நபர்கள் ஈடுபட்டிருந்தனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் பறந்தது. குறித்த பொலிஸ் பிரிவினர், சம்பவ இடத்துக்கு விரைந்ததைக்கண்ட சந்தேகநபர்கள் இருவரும் அங்கிருந்து தப்பியோடும்போது துரத்திப் பிடிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட நபர்கள், கொக்குவில் மற்றும் நாவாந்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளனர். அவர்கள் விசாரணையில் உள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## காய்ச்சலால்...

உயிரிழந்தார்.

சம்பவத்தில் உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த பஜிதரன் சப்திகன் (வயது6) என்ற சிறுவனே உயிரிழந்தார்.

சிறுவனுக்கு கடந்த மூன்று நாள்களாக காய்ச்சலுடன் கடும் உடல் சோர்வு காணப்பட்டுள்ளது. அதனால் அவர் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் உயிரிழப்புக்கு காய்ச்சல் காரணம் என்று மருத்துவக் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்த திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார், சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பணித்துள்ளார்.

இவர், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் தரம் ஒன்றில் பயிலும் மாணவராவார். (த-26)

## அந்நிய...

வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

கடந்த மே 22 மற்றும் 23ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்த நாடு கடந்த தமிழீழ அரசின் அரசவை அமர்வின்போது, 'சுயநிர்ணய உரிமையும், ஈடுசெய் நீதியிலான பிரிந்து செல்லலும்', 'இந்தியப் பெருங்கடலும் இலங்கைத் தீவில் பெருகிவரும் சீன ஆதிக்கமும்', 'தமிழ்நாட்டு ஆட்சி மாற்றமும் இந்தியாவை நோக்கிய செயற்பாடும்' ஆகிய தொனிப்பொருள்களில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் பங்கெடுத்திருந்த கருத்தமர்வுகள் நடைபெற்றிருந்தன.

இதில், ஈழத்தில் சீனாவின் கால் பதிப்பு பற்றியும், சிறிலங்காவில் சீன துறைமுக பட்டினம் பற்றியும், தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல நிலத்தை அண்டிய கடலிலும் உண்டு என்பது உறுதியாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

தொடர்ந்து மேற்குறித்த நிலைப்பாட்டை தனது அமர்வின் நிறைவுரையில் வலியுறுத்திய பிரதமர் வி.உருத்திரகுமாரன், தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெறாது எந்தவோர் அந்நிய சக்திகளின் நடவடிக்கைகளுக்கும் எதிராக தாயக மக்களும், தாயக தமிழ் அரசியல் தலைவர்களும் போராட வேண்டும் என அறைகூவல் விடுத்துள்ளார்.

இதேவேளை, இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் குறிப்பாக இலங்கைத்தீவில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்கான மூலோபாயமாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்துடன் நமது உறவுகளைச் சுருக்கிக்கொள்ளாமல், ஆசிய பசுபிக் பிராந்தியங்களுடன் உறவுகளை வளர்த்துக்கொள்ள கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக இந்தியாவுடன் மட்டும் ஈழத் தமிழர்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் ஆசிய பசுபிக் பிராந்திய பெருங்கடல் நாடுகளுடனும் செயற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும் என்ற அவசியமும் வலியுறுத்தப்பட்டது. கொரோனா வைரஸ் பெருந்தொற்றுக் காரணமாக நேரடி அமர்வை நடத்த முடியாத நிலையில், இணையவழியே நடைபெற்றிருந்த இந்த அரசவை அமர்வில், ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்குப் பொதுவாக்கெடுப்பு பொறிமுறை குறித்த அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

அமைச்சுக்களின் அறிக்கை, அரசவை உறுப்பினர்களின் கருத்துரைகள் மற்றும் மேற்சபை உறுப்பினர்களுடனான கூட்டமர்வு உட்பட பல்வேறு விடயங்களுடன் இடம்பெற்றிருந்த இருநாள் அரசவை அமர்வை துணை அரசவைத் தலைவர் ரஜனி தேவி செல்லத்துரை நடத்தியிருந்தார் - என்று அந்த அமைப்பு தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (த)

## ஆயுள்தண்டனை...

இராஜாங்க அமைச்சர் லோகன் ரத்வத்தே தெரிவித்தார். கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆயுள் தண்டனை அனுபவித்த கைதிகள் இதுவரை ஜனாதிபதியின் மன்னிப்பு சட்டத்தின் கீழ் மன்னிக்கப்படவில்லை. இருப்பினும், இந்த வெசாக் தினத்தில் ஜனாதிபதி மன்னிப்பு சட்டத்தின் கீழ் ஆயுள் கைதிகளின் ஆயுள் தண்டனை 25 ஆண்டுகளாக குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 247 கைதிகளில் 53 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 194 கைதிகள் இன்று முதல் சாதாரண கைதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டம் நான்கு ஆண்டு மறுஆய்வு நடவடிக்கையின் கீழ் சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கான ஆரம்ப கட்டமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, எதிர்காலத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு சிறைகளில் மறுவாழ்வு வழங்கப்பட்டு மன்னிப்பு வழங்குவதற்கான செயன்முறை தயாரிக்கப்பட்டு வருகின்றது. - என்றார்.

எனினும், அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிய எந்தவொரு விடயத்தையும் அவர் குறிப்பிடவில்லை. (த-இ)

## 71 குடும்பங்களை...

பாணத்தில் வீசிய கடும் காற்றுக் காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் நேற்றுக் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் இந்தப் பாதிப்பின்போது, காயமடைந்த சிறுமி ஒருவர் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

கடும் காற்றின் தாக்கத்தின் காரணமாக வேலணை பிரதேசத்தில் இரண்டு வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. ஏனைய பிரதேச செயலர் பிரிவில் 60 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. சிறு தொழில் முயற்சி யாளர்கள் ஒன்பது பேர் காற்றின் தாக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாதிப்புக்கள் தொடர்பில் அனைத்து விவரங்களும் பிரதேச செயலகங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு மத்திய இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

வேலணை, காரைநகர் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, காரைநகரில் பனை மரம் வீழ்ந்து காயமடைந்த சிறுமியின் வீட்டுக்கு இடர் முகாமைத்துவப் பிரிவு நேற்றுப் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்தது. (த-20,26)

## கொரோனாவால் 29 பேர் சாவு

கொழும்பு, மே 27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 29 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,298 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பி.சி.ஆர். இயந்திரம் கொள்வனவு



## வடக்கு எம்.பி.க்கள் என்ன சொல்கிறார்கள்

வவுனியா மாவட்டத்துக்கு பி.சி.ஆர். இயந்திரம் தேவை என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் கொழும்பு சுகாதார அமைச்சுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டு அது இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இலங்கையின் வேறு மாகாணங்களில் வர்த்தகர்கள், கொடையாளிகள் மற்றும் அரசியல்வாதிகள் போன்றோர் பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். பி.சி.ஆர். இயந்திரத்தின் பெறுமதி 45 லட்சம் ரூபா ஆகும். வடக்கு மாகாணத்தில் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் 3 லட்சத்து 22 ஆயிரம் ரூபா பங்களிப்புச் செய்தால் பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய முடியும். இது தொடர்பில் மக்கள் கோரிக்கையும் முன்வைத்திருந்தனர். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய பதில்கள்,

'பல்வேறு தரப்புகளிடமும் நிதியைப்பெற்று இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான முழுமையான முயற்சியை எடுப்பேன். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதியை வழங்கினால் நானும் வழங்குவேன்'

**செல்வம் அடைக்கலநாதன்**
(வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

'மக்களின் தேவைக்கு முன்னுரிமையளிப்பேன். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்களிப்புச் செய்கின்றபோது நானும் வழங்கத் தயாராகவே உள்ளேன்'

**த.சித்தார்த்தன்,**
(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

'இவ்வாறான பொதுத் தேவைக்கு பங்களிப்புச் செய்வதற்கு தயாராகவுள்ளேன்'

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,**
(யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)

'வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதிப்பங்களிப்புடன், பி.சி.ஆர். இயந்திரம் கொள்வனவு செய்வதற்கான சூழல் ஏற்பட்டால், அதற்கு எனது பங்களிப்பை நிச்சயமாக வழங்குவேன். அதற்கு ஏனைய நன்கொடையாளர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளலாம்'

**காதர் மஸ்தான்**
(வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சிறிலங்கா பொதுஜன பெரமுன)

'பி.சி.ஆர். இயந்திரத்தைக் கொள்வனவு செய்து வழங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் நான் பங்களிப்புச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றேன்'

**எம்.ஏ.சுமந்திரன்**
(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

'ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பி.சி.ஆர். இயந்திரங்களை வழங்கவேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கான பங்களிப்பைச் செய்யும்போது நானும் வழங்குவேன்'

**இ.சாள்ஸ் நிர்மலநாதன்**
(வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

'பி.சி.ஆர். இயந்திரம் தேவை என்ற கோரிக்கை இதுவரை என்னிடம் முன்வைக்கப்படவில்லை. ஆனால் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர் என்ற வகையில் அதன் தேவையை நான் உணர்ந்து, வவுனியாவுக்கு ஒரு இயந்திரம் தேவை என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளேன். அவர் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியுடன் பேச்சு நடத்தியுள்ளார். விரைவில் அரசால் வழங்கப்படும் இயந்திரம் வவுனியாவுக்கு கிடைக்கும். இதேவேளை ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து நிதி வழங்கி இயந்திரத்தை கொள்வனவு செய்யும் நிலைமை ஏற்பட்டால் அதற்கும் நான் தயாராகவே இருக்கிறேன்'

**கு.திலீபன்**
(வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)

'மக்களின் தேவைக்கு எவ்வகையான பங்களிப்பையும் வழங்குவேன்'

**செ.கஜேந்திரன்**
(யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி)

வவுனியா மருத்துவமனைக்கான பி.சி.ஆர். இயந்திரம் தொடர்பாக வடக்கு மாகாண சுகாதாரத் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய அது வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்ச்சியாக அமைச்சரவை கூட்டங்களின் போது என்னால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக சுகாதார அமைச்சர் சாதகமான கருத்துக்களையே தெரிவிக்கின்ற நிலையில், சில நடைமுறை காரணங்களால் காலதாமதம் ஏற்படுவதாகவே கருதுகின்றேன். அந்தவகையில், உங்களுடைய எதிர்பார்ப்புக்கு அமைய ஏனையவர்கள் முன்வருவார்களாயின், என்னுடைய பங்களிப்பையும் வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறான உயரிய பணிகளில் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமன்றி, கடந்த காலங்களில் எமது மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்து வப்படுத்தியவர்களும் தங்களுடைய பங்களிப்பை நல்குவது சிறப்பானதாக இருக்கும் என்பதையும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**
(யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனிடம் மின்னஞ்சல் ஊடாக நேற்றுமுன்தினம் கேட்கப்பட்டது. அவரது பதில் கிடைக்கப்பெறவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடம் கேட்டபோது, 'உதயன்' பத்திரிகைக்கு பதிலளிக்கமாட்டேன் என்று குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனிடம் தொடர்பு கொண்டபோது, கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டிருக்கிறேன் எனத் தெரிவித்து அலைபேசியைத் துண்டித்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராத லிங்கத்துக்கு நேற்றுமுன்தினமும், நேற்றைய தினமும் பலமுறை தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியபோதும் பதிலளிக்கவில்லை. அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சிறையில் இருப்பதால் அவருடன் தொடர்புகொள்ள முடியவில்லை. (ஒ,5,6,22,26,110)

# எனது பங்களிப்பை வழங்கத் தயார்

## மாநகர மேயர் மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 27

வடக்கு மாகாண மக்களுக்கான பி.சி.ஆர். இயந்திரக் கொள்வனவுக்கு எனது பங்களிப்பை வழங்குவதற்கு நிச்சயம் தயாராக இருக்கின்றேன் என்று யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர மேயர் வி.மணிவண்ணன், 2018ஆம் ஆண்டு யாழ். மாநகர சபை உறுப்பினராகத் தேர்வாகியிருந்தார். அவர் மாநகர எல்லைக்குள் வதிவிடத்தைக் கொண்டிராதவர் என்பதால் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குமாறு வழக்குத் தொடரப்பட்டது. அதன் இடைக் காலக் கட்டளைக்கு அமைவாக அவரது உறுப்புரிமை வெறிதாக்கப்பட்டது. வழக்கு மீளப்பெறப்பட்டதைத் தொடர்ந்து அவர் உறுப்பினராகத் தொடர்ந்தார்.

அத்துடன் முன்னைய மேயர் ஆனல்ட் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமையால் புதிய மேயரைத் தெரிவுசெய்வதற்கான போட்டியில் மணிவண்ணன் வெற்றி பெற்று மேயரானார். அவரது உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டிருந்த காலத்துக்குரிய கொடுப்பனவு அவருக்கு வழங்கப்படவுள்ளது.

அந்தக் கொடுப்பனவு முழுவதும் மக்கள் நலனுக்கே வழங்கப்படும் என்று தெரிவித்த மணிவண்ணன் அதிலிருந்து 2 தொடக்கம் 3 லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையை பி.சி.ஆர். இயந்திரக் கொள்வனவுக்கு வழங்கத் தயாராக இருக்கிறேன் எனக் குறிப்பிட்டார். (ஒ.5,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சிறந்த அண்டை நாடு சீனா

## ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்
## இந்தியாவைச் சீண்டியது இலங்கையிலுள்ள சீனத் தூதரகம்

**கொழும்பு, மே 27**
**இலங்கையின் மிகச் சிறந்த அண்டை நாடு சீனா என்று அந்த நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ச்சி சென் ஹோங் தெரிவித்துள்ளார்.**



சீனாவின் இரண்டாவது கட்ட நன்கொடையாக வழங்கப்பட்ட 5 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகளை கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் வைத்து, இலங்கை சுகாதார அமைச்சரிடம் கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
'ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்' என்ற வாசகத்துடன் ஆரம்பித்த அவரது உரையில், வைரஸ் பரவல் ஏற்பட்டது முதல் இலங்கையும் சீனாவும் ஒன்றுக்கொன்று ஆதரவளித்து செயற்பட்டு வருகின்றன. இரு நாட்டு நட்புறவு மேலும் வளர்ந்துள்ளது.
இலங்கையின் சிறந்த அண்டை நாடாகவும், நண்பராகவும், கூட்டாளியாகவும் சீனா உள்ளது. கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என எக்காலத்திலும் இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் நன்மை தரும் விடயங்களில் சீனா ஈடுபடுவது உறுதி, என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு இந்தியா நன்கொடையாக 6 லட்சம் தடுப்பூசிகளை வழங்கியது.
இதன் பின்னர் இலங்கை இந்தியாவிடம் 6 லட்சம் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே சீனா மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளது. (ஒ.5)



5 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகள்

## சீனாவின் இரண்டாம் கட்ட நன்கொடையாக வந்தடைவு

கொழும்பு, மே 27
இலங்கைக்கு சீனா இரண்டாம் கட்டமாக நன்கொடையாக வழங்கிய 5 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் இலங்கையை நேற்று அதிகாலை வந்தடைந்தன.
அவற்றை இலங்கைக்கான சீனத் தூதுவர், சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம் கையளித்தார். இலங்கைக்கு சீனா கடந்த ஏப்ரல் மாதம் 6 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகளை முதல் கட்டமாக நன்கொடையாக வழங்கியது. இதன் பின் இரண்டாம் கட்டமாக மேலும் 5 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகளை வழங்குவதாக வாக்குறுதி வழங்கியது.
இதற்கு அமைவாக இரண்டாம் கட்ட நன்கொடைப் பொருள்களுடன் சீனாவின் தலைநகர் பீஜிங்கிலிருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் நேற்று அதிகாலை கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. (ஒ.5,இ)

## தடுப்பூசிக் கொள்வனவுக்காக 250 மில். டொலர் ஒதுக்கீடு

கொழும்பு, மே 27
இலங்கை அரசு இதுவரை சுமார் 3.25 மில்லியன் டொலர்களை கொரோனாத் தடுப்பூசிகளுக்காக செலவிட்டுள்ளது. மேலும் 250 மில்லியன் டொலர் திறைசேரியால் எதிர்காலத்தில் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
அஸ்டாஜெனரா கொவிஷீட்ஸ் தடுப்பூசியின் 5 லட்சம் டோஸ்களை கொள்வனவுசெய்வதற்கு 27 லட்சம் டொலர் செலவிடப்பட்டுள்ளது. அதேபோன்று ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் 65 ஆயிரம் டோஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு 6 லட்சம் டொலர் செலவிடப்பட்டுள்ளது. ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் 65 ஆயிரம் டோஸ்களிலிருந்து 15 ஆயிரம் டோஸ்கள் கடந்த மாதம் இலங்கையை வந்தடைந்தன. எஞ்சிய 50 ஆயிரம் டோஸ்களும் இலங்கையை நாளை வந்தடையவுள்ளன.
அஸ்டாஜெனரா தடுப்பூசி ஒன்று 5.25 டொலர் பெறுமதிக்கு இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்தும், ஸ்புட்னிக் வி தடுப்பூசி ஒன்று 9.95 டொலர் பெறுமதிக்கு ரஷ்யாவிடமிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 33 லட்சம் டொலர் செலவு செய்யப்பட்டுள்ளது. (ஒ.5,இ)

## சீனாவின் 'சைனோவெக்' தடுப்பூசி 2 மாதங்களில் இலங்கையில் உற்பத்தி

### இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிப்பு

கொழும்பு, மே 27
இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பயனாக 'சைனோவெக்' தடுப்பூசிகளை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் இரண்டு மாதங்களில் ஆரம்பிப்பதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது என மருந்து உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.
சீனாவிடமிருந்து இலங்கைக்கு அன்பளிப்பாக கிடைத்துள்ள மேலும் 5 லட்சம் சைனோஃபார்ம் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை வந்தடைந்தன. சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தலைமையிலான இலங்கைக் குழுவினரிடம், மேற்படி தடுப்பூசிகளை இலங்கைக்கான சீனத்தூதுவர் கையளித்தார்.
இரண்டாம் கட்ட அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றுள்ள 5 லட்சம் தடுப்பூசிகளை மக்களுக்கு ஏற்றும் பணி நாளை முதல் (இன்று முதல்) ஆரம்பமாகும் என்றும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.
சீனாவிடமிருந்து 2 மில்லியன் தடுப்பூசிகளை இலங்கை கொள்வனவு செய்ய ஏற்பாடுகளை செய்துள்ள நிலையில் அவை இன்னும் ஒரு மாதத்துக்குள் கிடைக்கப்பெறும் என சீனத் தூதுவர் உறுதியளித்தார். இதன்படி ஜூன் 2ஆம் வாரமளவில் தடுப்பூசிகள் நாட்டை வந்தடையும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ.5,44)



## தடுப்பூசி செலுத்தலில் பாரபட்சம் கிடையாது

### சுகாதார அமைச்சு விளக்கம்

கொழும்பு, மே 27
கொரோனாத் தொற்றுக்கான தடுப்பூசி செலுத்தும் விடயத்தில் எந்தவித பாரபட்சமும் காண்பிக்கவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு ரிட்ஜ்வே மருத்துவமனையில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையின்போது ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பாக, சுகாதார அமைச்சு விளக்கமளித்துள்ளது.
சுகாதாரப் பணியாளர்கள் விடயத்தில் அரசு பாரபட்சம் காட்டாது. பிழையான தகவல்கள் மற்றும் நிலைமையைச் சரிவரக் கையாளாமை காரணமாகவே அங்கு குழப்பம் ஏற்பட்டது. எனினும் நிலைமையைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்று அமைச்சு மேலும் தெரிவித்தது. (ந-4)

# குருநாகல், மாத்தறை, காலி தடுப்பூசி ஏற்றலுக்குத் தேர்வு

### அமைச்சரவை இணைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 27
கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் குருநாகல், மாத்தறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஸ் பத்திரன தெரிவித்துள்ளார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குருநாகல், மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால், அடுத்த மாதம் கிடைக்கப்பெறும் தடுப்பூசிகளை அங்குள்ள மக்களுக்கு வழங்க எதிர்பார்க்கிறோம் என அவர் குறிப்பிட்டார்.
இதுவரை காலமும் மேல் மாகாணத்திலேயே தடுப்பூசி ஏற்றும் செயன்முறை நடைமுறைப் மாகாணத்துக்கு வெளியில் கண்டி மாவட்டத்தில் இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் ரமேஸ் பத்திரன கூறினார். அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுக் கொண்டவர்களில் 6 லட்சம் பேருக்கு இரண்டாவது டோஸ் ஏற்றப்படவேண்டியுள்ளது. அதனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எதற்காக ட்ரோன்கள்?

வடமாகாணத்தின் பல இடங்களிலும் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் நேற்று வான் வழிக் கண்காணிப்புக் கருவிகளான ட்ரோன்கள் பறக்கவிடப்பட்டன. கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிரான கட்டுப்பாட்டுச்செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த ட்ரோன்கள் பறக்கவிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், ட்ரோன்கள் மூலமாக எவ்வாறு கொரோனாவைக் கட்டுப்படுத்தப் போகின்றார்கள் என்ற திட்டத்தையும் உரியவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

ட்ரோன்கள் மூலம் மேற்கொள்ளப்படும் இந்தக் கண்காணிப்பு சில சிக்கல்களைக் கொடுக்கும். அவற்றில் முதலாவதும் முக்கியமானதும் 'தனிநபர் சுதந்திரம்' என்பதை இந்த ஆகாயக் கண்காணிப்பு மிகையாகப் பாதிக்கும். தன் வீட்டுக்குள் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை எதுவும் ஒரு தனிமனிதனின் அன்றாட வாழ்க்கைக்குப் பொருந்தாது. வீடும் காணியும் பொதுவெளியல்ல. ஆடை உள்ளிட்ட பல விடயங்களில் அவன் தன் விருப்பப்படி தன் இல்லத்துக்குள் அல்லது தன் நிலப்பரப்புக்குள் வாழ்ந்துகொள்வான். இவ்வாறான நிலையில் இந்த வான் கண்காணிப்பு தனி மனிதனின் தனிப்பட்ட விடயங்களில் மூக்கை நுழைப்பது போன்றதாகவும் அமைகின்றது. இன்னும் சொல்லப்போனால், இது ஒருவனின் அந்தரங்க விடயங்களில்கூட குறுக்கீடு செய்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது ஒன்றும் கடுமையான ஊரடங்கு உத்தரவு அல்ல. இது பயணத்தடை. பயணத்தடை காலத்திலும் நடமாடலாம் என்று அனுமதியளிக்கப்பட்டுள்ள நபர்கள் தொடர்பான பட்டியலையும் இங்கு கவனிக்க வேண்டியது அவசியமானது. ஊடகவியலாளர்கள், மருத்துவர்கள், மருந்தகப் பணியாளர்கள், பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுபவர்கள், அரச மற்றும் தனியார் ஊழியர்கள் என்று அந்தப் பட்டியல் ஓரளவு நீட்சியானதுதான். எனவே அத்தியாவசியத் தேவையின் நிமித்தம் - சேவையின் நிமித்தம் செல்பவர்கள்கூட இந்த ஆகாய மார்க்கக் கண்காணிப்புக்கு உட்படத்தான் போகின்றனர். அவர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது. அப்படியெனில் எதற்காக இந்தக் கண்காணிப்பு? யாருக்காக இந்தக் கண்காணிப்பு? என்ற கேள்விகள் இங்கே எழுகின்றனவல்லவா!.

அதிலும் குறிப்பாக நகர்ப் பகுதிகளில்தான் இந்த ஆகாயக் கண்காணிப்பு இடம்பெறுகின்றது. சந்திக்குச் சந்தி வீதித் தடைகளை உருவாக்கி, இராணுவத்தினரையும் பொலிஸாரையும் குவித்து வைத்துக்கொண்டு, அது போதாதென்று ட்ரோன்களைப் பறக்கவிடுவதன் மர்மம் என்னவென்று புரியவேயில்லை.

'எங்களிட்டையும் சீப்பு இருக்கு, நாங்களும் சீவுவம்' என்ற வடிவேலுவின் காமெடிபோல எங்களிடமும் ட்ரோன் தொழில்நுட்பம் உள்ளது; நாமும் பயன்படுத்துவோம் என்ற தோரணையில் நடந்துகொள்ளாமல் எதுவெல்லாம் நடைமுறைச் சாத்தியப்படுமோ அவற்றையெல்லாம் முதலில் செயற்படுத்த அரச தரப்பு முன்வர வேண்டும்.

பயணத்தடையை மீறுபவர்களைக் கண்காணிக்க மோட்டார் சைக்கிள் படையணி ஒன்று யாழ்ப்பாணப் பொலிஸாரால் உருவாக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயம். அந்தப் படையணியின் செயற்பாடுகள் வெறுமனே நகரப் பகுதிகளை மையப்படுத்தியதாக இருக்காமல், கிராமப் பகுதிகளை நோக்கி விரைவுபடுத்தப்பட வேண்டும். ஏனெனில் கிராமப் பகுதிகளில்தான் அதிகளவு சுகாதார நடைமுறை மீறல்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் அங்குதான் அதிகப்படியான எச்சரிக்கைகளும் கண்காணிப்புக்களும் விழிப்புணர்வூட்டல்களும் தேவை.




# கிளிநொச்சி கொடித்தோடைச் செய்கை விவசாயிகளும் முடக்கத்தால் பாதிப்பு

**கிளிநொச்சி, மே 27**

**கிளிநொச்சி மாவட்டத்தில் கொடித்தோடைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளும், முடக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கையில்;

விவசாய அமைச்சின் எண்ணக்கருவுக்கு அமைய விவசாய நவீனமாக்கல் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் அரசால் கொடித்தோடை கொத்தணிக் கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டது. சுமார் 100 பயனாளிகளுக்கு தலா சுமார் 6 லட்சம் பெறுமதியான கொடித்தோடைக்கு ஏற்ற விவசாய உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதன்படி அக்கராயனில் கொடித்தோடை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் கொரோனாவின் நிலையால் கொடித்தோடையை அறுவடைசெய்து சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உரிய காலத்தில் அறுவடை செய்யாமையால் நாளுக்கு நாள் கொடித்தோடம் பழங்கள் பழுதடைகின்றன. எனவே சம்பந்தப்பட்ட மாவட்டமட்ட அதிகாரிகள் எமது நிலைமைகள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு, இச்செய்தியைப் பார்க்கும் பழச்சாறுத் தொழிற்சாலைகள் எமது வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலும் கொடித்தோடம் பழங்களை கொள்வனவுசெய்வதற்கு முன்வரவேண்டும் - என்றனர். (ப-214)

# மன்னாரில் 400 படுக்கைகளுடன் கூடிய இரண்டு சிகிச்சை நிலையங்கள்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார்,மே 27

மன்னார் மாவட்டத்தில் 400 படுக்கைகள் கொண்ட இரு இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்று மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான முன்னேற்பாட்டுக் கூட்டம் ஒன்று மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்பொழுது உள்ள சூழ்நிலையில் மன்னார் மாவட்டத்தில் நாங்கள் கொரோனா நோயாளர்களுக்கென தாராபுரம் துருக்கி சிட்டியில் ஏற்படுத்தப்பட்ட இடைத்தங்கல் சிகிச்சை [illegible] பட்டுள்ளனர்.

இவர்களில் 15 பேர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையவர்கள் வவுனியா மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

எதிர்கால நடவடிக்கையாக கொரோனா நோயாளர்களுக்காக 400 படுக்கைகள் கொண்ட நிலையங்களை ஒழுங்குப் படுத்திக் கொண்டு இருக்கின்றோம். நோயாளர்கள் அதிகரித்தால் இரண்டு நிலையங்களைத் திறப்பதற்கான ஆயத்தங்களையும் மேற்கொண்டு வருகின்றோம்.

மாந்தை மேற்கு பகுதியில் 29 குடும்பங்களும், முசலி பிரதேச பிரிவில் 9 குடும்பங்களும், நானாட்டான் பிரதேச பிரிவில் 34 குடும்பங்களும்,மடுவில் 3 குடும்பங்களும், மன்னாரில் 74 குடும்பங்களும் தற்போது தனி [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### யாழ்., வவுனியாவில்

# பயணத்தடையை மீறுவோரை கண்காணிக்க 'ட்ரோன் கமரா'



**யாழ்ப்பாணம்,மே 27**
**நாட்டில் பயணத்தடை நடைமுறையில் உள்ள வேளையில் பொதுமக்களின் நடமாட்டத்தைக் குறைக்கும் வகையில் பொலிஸாரும் விமானப்படையினரும் இணைந்து ட்ரோன் கமராவின் உதவியுடன் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நேற்று முதல் இந்தக் கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண நகரம், நல்லூர் ஆலயம் மற்றும் யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் ட்ரோன் கமராக்களின் உதவியுடன் பொதுமக்களின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அத்தியாவசிய சேவை தவிர்ந்து பயணிபவர்கள் பொலிஸ் மோட்டார் சைக்கிள் படையணியினரால் கைது செய்யப்படுவர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரம், கற்குழி, தேக்கவத்தை மற்றும் வைரவபுளியங்குளம் ஆகிய பகுதிகளில் ட்ரோன் கமராவின் உதவியுடன் கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன் போது தேக்கவத்தை பகுதியில் பயணத் தடையை மீறி ஒன்று கூடி வீதிகளில் கலந்துரையாடியவர்கள் மற்றும் வீதிகளில் நடமாடியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.(ஐ-26,18)

எதிர்க்கட்சித் தலைவர்

## அலுவலகத்தில் 10 பேருக்குத் தொற்று

கொழும்பு, மே 27
நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகப் பணியாளர்கள் 10 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.
அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது பாரியார் ஆகியோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவருடன் தொடர்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.
நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மற்றும் அவரது பாரியார் ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றைய தினம், எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகப் பணியாளர்கள் 10 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5,இ)

மன்னாரில் தொற்றுக்குள்ளான

## கர்ப்பிணிக்குப் பிரசவம் சிசுவுக்கு தொற்றில்லை



மன்னார், மே 27
மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 41 வயதான கர்ப்பிணித் தாய்க்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் அவர் கடந்த 24ஆம் திகதி குழந்தை பிரசவித்திருந்தார். குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் குழந்தைக்கு தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. (ஒ,5)

## பயணக் கட்டுப்பாட்டில் வீடுகளில் தகராறுகள்

- 150 பேர் மருத்துவமனையில்
- அவர்களில் 112 பேர் ஆண்கள்

கொழும்பு, மே 27
நாட்டில் நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாட்டுக் காலப்பகுதியில், வீடுகளில் இடம்பெற்ற தகராறுகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட 150க்கும் மேற்பட்டவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 112 பேர் ஆண்கள் எனவும், 42 பேர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை இந்தக் காலப்பகுதியில், வீட்டு வன்முறையால், நபரொருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமும் பதிவாகியுள்ளது. (ம-4)



## முச்சக்கரவண்டிச் சாரதிகளை தனிமைப்படுத்த நடவடிக்கை

மாங்குளம், மே 27
முல்லைத்தீவு -மாங்குளம் சந்தியில் உள்ள முச்சக்கர வண்டிகளின் சாரதிகளில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் அனைவரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
மாங்குளம் நகர் பகுதியில் முச்சக்கரவண்டிகள் சங்கத்தைச் சேர்ந்த சுமார் 20 வரையானவர்கள் முச்சக்கரவண்டிகளை வைத்து தொழில்செய்துவருகின்றார்கள்.
கடந்த 23ஆம் திகதியன்று முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் பத்து பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் நீதிபுரம் பகுதியில் வசித்து வரும் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது.
இதனைத் தொடர்ந்து முச்சக்கரவண்டிகள் சங்கத்தின் சாரதிகள் அனைவரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் பொதுச் சுகாதாரபரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர். (ப-19)

## தும்பளையில் இறுதிக் கிரியையில் பங்கேற்றோர் தனிமைப்படுத்தலில்



பருத்தித்துறை,மே 27
பருத்தித்துறை -தும்பளையில் இடம்பெற்ற இறுதிக் கிரியையில் பங்கேற்ற பூசகர் உள்ளிட்டவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.
உயிரிழந்தவரின் மகன் யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கி ஒன்றில் பணியாற்றுகின்றார். அவருக்கு கடந்த திங்கட்கிழமை பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அதன் பெறுபேறுகள் கிடைக்கப்பெற வில்லை. இந்த நிலையில் வங்கியாளரின் தந்தை காலமாகிய நிலையில் இறுதிச் சடங்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை வங்கியாளருக்கு கொவிட்19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து வங்கியாளரின் தந்தையின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்றவர்கள், கிரியை செய்த பூசகர் உள்ளிட்டோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளனர் (ஐ-26,20)

## கொரோனாத் தொற்றாளர் தப்பியோட்டம்



கொழும்பு, மே 27
கொள்ளுப்பிட்டி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற, கொரோனாத் தொற்றாளர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அம்பாறையைச் சேர்ந்த முகமட் ரிகாஸ் என்பவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். குறித்த நபர் தொடர்பான தகவல்களை அறிந்தவர்கள், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

## வெளிநாட்டு பயணிகளுக்கான தடை நீக்கம்

கொழும்பு, மே 27
வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்காக, மூடப்பட்டுள்ள இலங்கையின் சர்வதேச விமான நிலையங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் திறக்கப்படும் என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் உபாலி தர்மதாச தெரிவித்துள்ளார்.
இதேவேளை கடந்த 14 நாள்களுக்குள் இந்தியாவுக்குப் பயணித்துள்ள பயணிகளை, மீள அனுமதிப்பது தொடர்பான கட்டுப்பாடு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் கொரோனாத் தொற்று அதிகரித்தமையால், இலங்கை வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு கடந்த வாரம் தொடக்கம் எதிர்வரும் மே 31ஆம் திகதி வரை இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணக் கட்டுப்பாட்டை தக்கவைக்க;

# பெண் பொலிஸ் மோ. சைக்கிள் அணியும் யாழ். நகரில் ரோந்து

யாழ்ப்பாணம், மே 27

**யாழில் பொதுமக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த இராணுவத்தின் பெண்கள் பிரிவு மோட்டார் சைக்கிள் அணியைத் தொடர்ந்து பெண் பொலிஸ் மோட்டார் சைக்கிள் அணியும் களத்தில் இறக்கப்பட்டுள்ளது.**



நாட்டில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக நாடு முழுவதும் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயணத் தடை கட்டுப்பாடுகளை மீறி வீதியில் பயணிப்போரை கண்காணிப்பதற்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் முக்கிய வீதிகளில், ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் பெண் பொலிஸ் மோட்டார் சைக்கிள் அணியினர் வீதியில் பயணிப்போரை வழிமறித்து சோதனையில் ஈடுபடுவதோடு அத்தியாவசிய சேவை தவிர்ந்து பயணிப்போரை எச்சரிக்கை செய்து வீடுகளுக்கும் அனுப்புகின்றனர். (ப-26)



## முகக்கவசம் அணியாது நடமாடியவருக்கு கொவிட்

வவுனியா,மே 27

வவுனியாவில் முகக்கவசம் அணியாது நடமாடியவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசேதனையில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில் வவுனியா நகரம், பசார் வீதி, வைரவ புளியங்குளம், குருமன்காடு, ஹொரவப்பொத்தானை வீதி, சந்தை உள்வட்ட வீதி மற்றும் மன்னார் வீதி ஆகிய பகுதிகளில் முகக்கவசம் அணியாது நடமாடிய 50 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 16 பேருக்கு நேற்றுமுன்தினம் அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து அழைத்துக் செல்லப்பட்டவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து அவரை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவருடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-18)

## ‘மாஸ்க்’ சீராக அணியாத 50 பேருக்கு எதிராக வழக்கு

வவுனியாவில் பொலிஸ், சுகாதாரப் பிரிவு நடவடிக்கை


வவுனியா, மே 27


பயணத்தடை தற்காலிகமாக நீக்கப்பட்ட நிலையில் வவுனியா வர்த்தக நிலையங்களில் சீரான முறையில் முகக்கவசம் அணியாது நின்ற 50 பேருக்கு எதிராக சுகாதாரப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், பி.சி.ஆர் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய தேவைகளுக்காக நேற்றுமுன்தினம் காலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை தற்காலிகமாக பயணத்தடை தளர்த்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வவுனியா நகரப் பகுதியில் பொருள் கொள்வனவுக்காக அதிளவிலான மக்கள் வந்த நிலையில் சுகாதாரப் பரிசோதகர்களும், பொலிஸாரும் இணைந்து விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது வர்த்தக நிலையங்களில் முகக்கவசம் அணியாது கடமையாற்றியவர்கள் மற்றும் முகக்கவசம் சீராக அணியாமல் கடமையாற்றியவர்கள் ஆகியோருக்கு எதிராக சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து நடவடிக்கையை முன்னெடுத்து, அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்தனர். அத்தோடு அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனையும் முன்னெடுக்கப்பட்டது. வவுனியா நகரம், ஹொரவப்பொத்தானை வீதி, ரயில் வீதி, குருமன்காடு, மன்னார் வீதி, பசார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை உள் வட்ட வீதி மற்றும் இலுப்பையடி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் நின்ற சுமார் 50 பேருக்கு எதிராக இவ்வாறு வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. (ப-18)



## பயணக் கட்டுப்பாட்டின்போது ‘சுத்துமாத்து’ செய்தோர் கைது

கொழும்பு, மே 27

மருத்துவர்கள் எனக் கூறி மருத்துவர்களின் சின்னத்தை தமது காரில் முறைகேடாகக் காட்சிப்படுத்திக் கொண்டு பயணித்த மூவர் கொழும்பில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாரஹேன்பிட்டி, கருவாத்தோட்டம் மற்றும் கொழும்பு கோட்டை ஆகிய பகுதிகளில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். சந்தேக நபர்கள் தனிமைப்படுத்தப்படுதல் சட்டம் மற்றும் ஆள்மாறாட்டம் செய்ததன் மூலம் மோசடி குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரிக்கப்படுவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்தார். (ப-இ)



## சிகிச்சை நிலையத்தில் உரிய வசதிகள் இல்லை

நோயாளிகள் விசனம்

வவுனியா,மே 27

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா மருத்துவமனையில் உரிய வசதிகள் செய்துதரப்படவில்லை என்று நோயாளிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது மழையுடனான காலநிலை மற்றும் அதிக காற்று வீசி வருவதால், விடுதிக்குள் மழைத்தூறல்கள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வயது முதிர்ந்த நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே நோயாளர்களின் நலன்கருதி குறித்த மருத்துவமனையில் மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் - என்றனர்.

வவுனியா பொருளாதார மத்திய நிலையம் 200 கட்டில்களைக் கொண்ட கொரோனா மருத்துவமனையாக இராணுவத்தால் அண்மையில் மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-110)

## ஆவி பிடித்த ஐவர் காயம்

கொழும்பு, மே 27

கொரோனாத் தொற்றிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கான, கை வைத்தியமாக நீராவி பிடித்த ஐவர், எரிகாயங்களுக்கு உள்ளாகி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொழும்பை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள், சூடான நீர் ஊற்றப்பட்டிருந்த பாத்திரம் கவிழ்ந்து காயமடைந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நீராவியை பிடித்துக்கொள்ளும் போது, மிகக் கவனமாகவும், பாதுகாப்பான முறைமைகளையும் கையாள வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ம-4)

## வீதிகளில் மாதிரிகள் பெறத்தடை

கொழும்பு, மே 27

பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளுக்காகப் பெறப்படும் மாதிரிகள், உரிய பாதுகாப்பான இடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், வீதிகளில் மக்கள் நடந்து செல்லும்போதோ அல்லது வாகனங்களில் பயணிக்கும்போதோ இடைமறித்து மாதிரிகளைப் [illegible]

கொரோனாத் தொற்றாளர்களைக் கண்டறிவதற்காக பரிசோதனைகளை மேற்கொள்ளும் தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ ஆய்வகங்களுக்கான வழிகாட்டல்கள் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த வழிகாட்டல்களில் இந்த விடயம் குறிப்பிடப்பட் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


யாழ்ப்பாண மாவட்டத்தில்

# கடும் காற்றுக் காரணமாக 46 குடும்பங்கள் பாதிப்பு

## இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவிப்பு

**யாழ்ப்பாணம்,மே 27**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக 46 குடும்பங்களைச் சேர்ந்த 172 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணத்தில் வீசிய கடும் காற்று காரணமாக ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக 172 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் சிறுமி ஒருவர் காயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார். அத்துடன் கடும் காற்றுக் காரணமாக இரண்டு வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், 42 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சிறு தொழில் முயற்சியாளர்கள் 5 பேர் காற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாதிப்புக்கள் தொடர்பில் அனைத்து விவரங்களும் பிரதேச செயலகங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு மத்திய இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

வேலணை, காரைநகர் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றார். (ஐ-20,26)



வீசிவரும் கடும் காற்றுக் காரணமாக ஆனைக்கோட்டை, சாவல்கட்டு பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பனை மரம் முறிந்து வீழ்ந்ததில், வீடு பலத்த சேதங்களுக்கு உள்ளானது. (ஐ-27)





## காற்றால் தூக்கி வீசப்பட்டது தருமபுரம் சந்தையின் கூரை

கிளிநொச்சி, மே 27

தற்பொழுது வீசிவரும் கடும் காற்றுக் காரணமாக கிளிநொச்சி தருமபுரம் பொதுச் சந்தையின் கூரை முற்று முழுதாக தூக்கி வீசப்பட்டது.

அப்பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைந்த காரணத்தால், பேரிழப்புகள் ஏதுமின்றி மக்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் இதன் காரணமாக வியாபாரம் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று சந்தை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

காற்றால் தூக்கி எறியப்பட்ட கூரையை மீண்டும் அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர். (ப)



புதுக்குடியிருப்பில் கடும் காற்று;

## மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் தடைப்பட்டது போக்குவரத்து

முல்லைத்தீவு,மே 27

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றுக் காரணமாக பயன்தரு மரங்கள் உள்ளிட்ட பெரிய மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் சில மணி நேரம் போக்குவரத்தும் தடைப்பட்டது.

புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியின் கெருடமடுப் பகுதியில் வீதியின் குறுக்கே காஞ்சிரமரம் ஒன்று பாறி வீழ்ந்ததால் சில மணி நேரம் வீதி ஊடான போக்குவரத்து தடைப் பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஊழியர்கள் மரக்கை அறக்கு அகற்றி வீதியின் போக்குவரத்தை சீர்செய்தனர்.

குரவில் பகுதியில் தென்னை மரம் ஒன்று முறிந்து மின்சார இணைப்பின் மேல் விழுந்துள்ளது.

அத்துடன் சுதந்திரபுரம் கொலனிப்பகுதியில் உள்ள வீட்டின் முன் நின்ற மரம் முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இதேவேளை இனிவாழ்வு இல்லத்துக்கு வெளியில் நின்ற வேப்பமரம் ஒன்று சரிந்து வீழ்ந்துள்ளது. இதனை அகற்றும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர். (ஐ-19)

## மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் மைதானம் சேதம்

சங்கானை,மே 27

வீசி வரும் பலத்த காற்றுக் காரணமாக கரப்பந்தாட்ட மைதானம் மீது பனை மரங்கள் இரண்டு முறிந்து வீழ்ந்ததில் பெறுமதியான பொருள்கள் சேதமடைந்துள்ளன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் கலைமகள் விளையாட்டுக்கழகத்தின் கரப்பந்தாட்ட மைதானமே இவ்வாறு சேதமடைந்துள்ளது.

இதனால் மின்விளக்குகள் உள்ளிட்ட பெறுமதி வாய்ந்த வலைக்கம்பிகள் என்பன சேதமடைந்துள்ளன.

குறித்த மைதானமானது அண்மையில் சுழிபுரம் மேற்கு இளைஞர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் புதிதாக அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



வீசிவரும் கடும்காற்றுக் காரணமாக அராலி மேற்கிலுள்ள மீன் ஏலம் விடும் வாடியின் கூரை சேதமடைந்துள்ளது. (ஐ)

## காற்றால் யாழ்ப்பாணத்தில் தொடரும் பாதிப்புகள்!

யாழ்ப்பாணம்,மே 27

நாட்டில் நேற்றுமுன்தினம் முதல் பரவலாக வீசிவரும் கடும் காற்றுக் காரணமாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பாதிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

தெல்லிப்பழை கிழக்கில் (J/227) பகுதியில் உள்ள வீடொன்றின் மேல் தென்னை மரம் வீழ்ந்து முறிந்ததில், வீட்டின் முன்புறம் சேதமடைந்துள்ளது. அத்துடன் கட்டு வன் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீடொன்றின் மீதும் பனை மரம் முறிந்து வீழ்ந்ததில் வீட்டின் ஒரு அறை, மலசலகூடம் மற்றும் இரண்டு கோழிக்கூடுகள் என்பவை பலத்த சேதம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடுங்காற்று;

# கிராமத்துக்குள் புகுந்தது கடல்நீர் அச்சத்தில் மீனவக் குடும்பங்கள்





**மன்னார், மே 27**

**கடுங்காற்றின் காரணமாக மன்னார் நானாட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட அச்சங்குளம் மீனவர் கிராமத்தில் நேற்றுமுன்தினம் கடல் நீர் கிராமத்துக்குள் புகுந்தது. இதனால் மக்கள் அச்சம் அடைந்தனர்.**


பலத்த காற்றின் காரணமாக கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு, கடல் நீர் ஓடை வழியாக கிராமத்தில் புகுந்துள்ளது. இதன்போது இறங்குதுறையில் உள்ள மீனவர்களின் படகுகள் சில மூழ்கியுள்ளதுடன், வீட்டு வளவுக்குள்ளும் நீர் புகுந்தது. தென்னங்கன்றுகளும், நீரில் மூழ்கின. கடல் நீர் வரத்து மிகவும் அதிகமாக காணப்பட்டதால் மக்கள் அச்சமடைந்தனர்.

இதுதொடர்பாக மீனவர்கள் சிலர் கருத்து தெரிவிக்கையில்;

இந்த ஓடை அருகிலேயே எமது வீடுகள் அமைந்துள்ளன. மழை காலங்களிலும் கடல் நீர் அதிகமாக கிராமங்களுக்குள் புகுந்து வீடுகளையும் பயன்தரும் தென்னை மற்றும் இதர மரங்களையும் அழிக்கின்றது. இந்த ஓடையைச் சுற்றி தடுப்பு அணை ஒன்றை அமைத்துத்தருமாறு நாங்கள் பல தடவை அதிகாரிகளுக்குக் கூறியுள்ளோம்.

இது தொடர்பாக எவரும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் அச்சங்குளம் கிராமமானது கடலில் மூழ்கும் ஒரு அபாய நிலையிலேயே பல வருடங்களாக உள்ளது. இதனை உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து இந்த அச்சங்குளம் மீனவக் கிராமத்தை காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

(ப-213)



## மன்னார் மாவட்டத்தில்

# கடும் காற்றுக் காரணமாக 16 குடும்பங்கள் பாதிப்பு

மன்னார்,மே 27

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றுக் காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 59 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கணகரட்னம் திலீபன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடும் காற்றால் மாவட்டத்தில் 13 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளதுடன், 2 சிறிய கடைகளும் சேதமடைந்துள்ளன.

மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 5 வீடுகளும், முசலி பிரதேச செயலர் பிரிவில் 2 வீடுகளும்,மடு பிரதேச செயலர் பிரிவில் ஒரு வீடும் இவ்வாறு சேதமடைந்துள்ளன.

மேலும் மன்னார் எருக்கலம்பிட்டி மற்றும் கொக்குப்படையான் ஆகிய கிராமங்களில் தலா ஒரு கடையும் சேதமடைந்துள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெரியமடு கிராமத்தில் 3 ஏக்கர் பப்பாசிச் செய்கையும், தேவன் பிட்டி மற்றும் வெள்ளாங்குளம் பகுதியில் 5 ஏக்கர் வாழைத்தோட்டமும் காற்றால் முழுமையாக சேதமடைந்துள்ளன- என்றார். (ஐ-56,60)

# வவுனியா மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக ராகுலன்

## கடமைகளைப் பொறுப்பேற்றார்



வவுனியா, மே 27

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் புதிய பணிப்பாளராக மருத்துவர் கலைநாதன் ராகுலன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவரான இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டத்தையும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் மருத்துவ நிர்வாகமாணி பட்டப்படிப்பையும் நிறைவுசெய்துள்ளார். முன்னர் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளராக கடமைகளை ஏற்று பல்வேறு தேவைப்பாடுகளோடு காணப்பட்ட மருத்துவமனையை பல்வேறு தரப்பினருடனும், உரிய அதிகாரிகளோடும், நன்கொடையாளர்களோடும் கலந்துரையாடி தேவைகளை நிறைவு செய்து மாவட்ட மக்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கும் மருத்துமனையாக கிளிநொச்சி பொது மருத்துவமனையை மாற்றுவதில் பெரும்பங்காற்றினார்.

தற்போது வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதற்கு மேலதிகமாக வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கொரோனாத் தடுப்பு இணைப்பாளராகவும் அவர் செயற்படு






# மன். நானாட்டானில் எரிபொருள் நிரப்ப வழியின்றி மக்கள் தவிப்பு

மன்னார்,மே 27

மன்னார் - நானாட்டான் பிரதேசத்தின் கடைத் தெருக்களை அண்மித்த பகுதியில் காணப்படுகின்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரி பொருள்கள் நிரப்ப முடியவில்லை என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

கடும் காற்றுக் காரணமாக நானாட்டான் பிரதேசத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான மின் துண்டிப்பு நேரத்தில் தனியாக இயந்திரம் வைத்து எரிபொருள்களை நிரப்பி வந்த எரிபொருள் நிலையத்தினர் இன்றைய அவசர கால நிலையில் அந்த முயற்சியை செய்யாததால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். பயணத் தடை காரணமாக சில நாள்களுக்கு மாவட்டம் முடங்க உள்ள நிலையில் விவசாய மற்றும் தோட்டப் பயிர்களுக்குத் தேவையான டீசல் மண்ணெண்ணெய், பெற்றோல் முதலியவற்றைச் சேமித்து வைப்பதற்கு வழியில்லாமல் மக்கள் தவித்து வருகின்றார்கள். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நானாட்டான் கிளையினர் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை விடாமல் மக்களுக்கு உரிய சேவைகளை சிறந்த முறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைவளம் தொடர்பான கற்கைநெறியை பல்கலை பாடத்தினுள் உள்ளீர்க்கவும்

யாழ்ப்பாணம், மே 27

பனை வளம் தொடர்பான பாடநெறிகளையும் பெருந்தோட்ட பயிர்கள் சார்பான பல்கலைக்கழக வளாகத்தின் பாடத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

பெருந்தோட்ட பயிர்களுக்கான பல்கலைக்கழக வளாகம் அமைப்பது தொடர்பாக கல்வி அமைச்சர் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ஆகியோரின் இணைந்த அமைச்சரவை பத்திரம் தொடர்பாக நேற்றுமுன்தினம் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்ட போதே மேற்குறித்த கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுமார் ஒரு கோடி பத்து லட்சம் பனை மரங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. அவற்றில் 96 வீதமானவை வடக்கு கிழக்கு பிரதேசத்திலேயே காணப்படுகின்றன. பனை வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுமாக இருந்தால், நாட்டின் பொருளாதாரத்துக்கான அந்நிய செலாவணியை கணிசமானளவு பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் சத்துள்ள உணவுப் பண்டங்களையும் உற்பத்திசெய்ய முடியும்.

ஆனால், தற்போது 20 வீதமான பனை வளங்கள் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன.

பனைசார் தொழில் தொடர்பாக இளையோர் மத்தியில் காணப்படுகின்ற புரிதல் இன்மையும் பனை வளம் தொடர்பான தொழில்களில் மக்களின் ஆர்வம் குறைவதற்கு காரணமாக இருக்கின்றது.

எனவே, பனை வளம் தொடர்பான பாடநெறிகளையும் பல்கலைக்கழக பாடத்திட்டத்தினுள் உள்ளடக்குவதன் மூலம், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டு தொழில் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கவையாக மாற்ற முடியும். இதன்மூலம், ஏனைய பெருந்தோட்டப் பயிர்களைப் போன்றே கணிசமான பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்

# சட்டவிரோத கடற்றொழில்; முல்லையில் 9 பேர் கைது



முல்லைத்தீவு, மே 27

**முல்லைத்தீவில் நாயாறு தொடக்கம் கொக்குளாய் வரையான கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 9 மீனவர்கள் படகுகளுடன் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

குறித்த கடற்பரப்பில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். கொக்குளாய் மற்றும் கருநாட்டுக்கேணி பகுதிகளைச் சேர்ந்த 9 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்ட போது, 9 பேரும் தலா இரண்டு லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ப-19)



## கனரக வாகனங்கள் மோதுண்டு விபத்து

யாழ்ப்பாணம், மே 27

யாழ். கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் இரு கனரக வாகனங்கள் நேருக்கு நேர் மோதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விபத்துக்குள்ளாகின. கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் காணப்பட்ட வளைவு ஒன்றில் இரு வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்டபோது, குறித்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப-20)

## குருமார்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்தவர் மகேஷ்வர குருக்கள்

*இந்துக் குருமார் அமைப்பு இரங்கல்*



யாழ்ப்பாணம்,மே 27

குருமார்களுக்கு அறிவார்ந்த வழிகாட்டியாக திகழ்ந்த சிவஸ்ரீ மகேஷ்வரக்குருக்களின் இறைபதச் செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம் என்று இந்து குருமார் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். சிவஸ்ரீ மகேஷ்வரக் குருக்களின் இறப்புச் செய்தி தொடர்பில் இந்துக் குருமார் அமைப்பு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது;

யாழ்ப்பாணம் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தில் சிவஸ்ரீ மகேஷ்வரக்குருக்கள் முக்கிய வகிபாகம் வகித்தவர். இறை பதம் எய்தும் வரை குருபீடாதிபதியாக விளங்கியவர். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய ஆதீன குருவாகவும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதான குருவாகவும் விளங்கிய பெருமைக்குரியவர். அமரர் மஹேஷ்வர குருக்களின் ஆத்ம சாந்தியடைய இறை பிரார்த்தனை செய்கிறோம்- என்றுள்ளது. (ஐ)



## விசுவமடுவில் காற்றுக் காரணமாக பெருமளவான வாழைகள் அழிவு!

முல்லைத்தீவு,மே 27

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றுக் காரணமாக அதிகளவான வாழைத்தோட்டங்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விசுவமடு பிரதேசத்தில் அதிகளவான விவசாயிகள் வாழைத் தோட்ட செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கடும் காற்றால் சுமார் 15 செய்கையாளர்களின் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாழைகள் குலைகளுடன் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் வாழைத் தோட்ட விவசாயிகள் பெரியளவான அழிவையும், பொருளாதார ரீதியிலான பின்னடைவையும் எதிர்கொண்டுள்ளனர். (ஐ-19)

முல்லை.மாவட்டத்தில்

## காற்றுக் காரணமாக நான்கு வீடுகள் சேதம்

முல்லைத்தீவு, மே 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றுக் காரணமாக நான்கு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், பல பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

ஒட்டுசுட்டான் மற்றும் மாங்குளம் ஆகிய கிராமங்களில் இரண்டு வீடுகளும், பேராற்று கிராமத்தில் ஒரு வீடும், விசுவமடு தொட்டியடி பகுதியில் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதில் இரண்டு தற்காலிக வீடுகளும், இரண்டு நிதந்தர வீடுகளும் அடங்குகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் காற்றுக்காரணமாக ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நேரடியாக சென்று புள்ளிவிவரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-19)

## வீடு புகுந்து தாக்குதல்; ஒருவர் நேற்றுக் கைது

*வவுனியாவில் 6 பேர் காயம்*

வவுனியா, மே 27

கும்பல் ஒன்று வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவுனியா ஆச்சிபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் கத்திகளுடன் உட்புகுந்த குழுவினர் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இத்தாக்குதல் காரணமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உட்பட 6 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தாக்குதலை மேற்கொண்ட கும்பல் தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை த் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்படி தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் விசாரணையில் உள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-110)

## வெடியரசன் சிலை அமைப்பு; மே மாத இறுதியில் தீர்மானம்

*காரைநகர் சபைத் தவிசாளர் தெரிவிப்பு*

காரைநகர், மே 27

காரைநகர் கடற்கரை பகுதியில் வெடியரசன் சிலை விரைவில் அமைக்கப்படவுள்ளது. சிலை அமைப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கடகிழமை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, புதிய குழுவிடம் அதற்கான அனுமதி வழங்கப்படும் என காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி. கேதீஸ்வரதாஸ் தெரிவித்துள்ளார். வெடியரசன் சிலை அமைப்பது தொடர்பில், வடமாகாண ஆளுநரின் அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டு 5 மாதங்கள் முடிவுற்றும் இதுவரை சமபந்தப்பட்ட குழு எவ்வித ஆக்கபர்வூமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இதனால் வெடியரசன் சிலையை ஒருமாத கால இடைவெளியில் அமைக்கக் கூடிய நிதிவளம் பொருந்திய குழுவிடம் இச்சிலை அமைப்பதற்கான பொறுப்பு எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக

## தனிமையிலுள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கல்

முல்லைத்தீவு,மே 27

கொரோனாத் தொற்றுக் காரணமாக முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் குளம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 6 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா விடுத்த வேண்டுகோளுக்கமைய தவிசாளரால் இந்த உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. இதேவேளை முல்லைத்தீவு தீர்த்தக்கரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 5 குடும்பங்களுக்கும் தவிசாளரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதியளவு நிதியுள்ளது இருப்பினும் உதவுங்கள்

### கோருகின்றார் நாமல்



கொழும்பு, மே 27
நாட்டில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த போதியளவு நிதி அரசிடம் உள்ளது. எனினும் தனவந்தர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், தங்களாலான உதவிகளைச் செய்யவேண்டும். இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாட்டில் பயணக் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளதால், மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். அதனால் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் மற்றும் எதிர்காலத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பவை தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது.
கொரோனாத் தொற்று எமது நாட்டுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. முழு உலகமும் இந்த இக்கட்டான நிலைக்கு முகம்கொடுத்துள்ளது.
நாம் வெற்றிகரமாக தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளோம். தடுப்பூசி செலுத்தும் விடயத்திலும் நாம் முன்னணியில் இருக்கின்றோம். எனவே, இது தனியாக மேலெழும் விடயமல்ல. உலகத்துடன் இணைந்தே இதிலிருந்து மேலெழ வேண்டும் - என்றார். (ம-4)

## மருத்துவமனைகள் கொரோனாத் தொற்றாளர்களை புறக்கணித்தால் முறையிடலாம்

### சுகாதாரத் திணைக்களம் அறிவிப்பு



**கொழும்பு, மே 27**
**கொரோனாத் தொற்றாளர்களை, மருத்துவமனைகள் மனிதாபிமானமற்ற விதத்தில் புறக்கணித்தால், அது தொடர்பில் தொடர்புடையவர்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாத் தொற்றாளர்களை சில மருத்துவமனைகள் உரிய முறையில் நடத்துவதில்லை என்பதை சுகாதார அமைச்சு அறிந்துள்ளது. சில மருத்துவமனைகளில் போதிய படுக்கை வசதிகள் இல்லை என்பதையும் அறிந்துள்ளோம். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறைபாடுகளைத் திருத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளும் எடுக்கப்படும் - என்றார். (ம-4)

## கொரோனாத் தடுப்பூசிகளால் இறப்பு வீதம் மிகக்குறைவு

### விஞ்ஞானிகள் தகவல்

கொழும்பு, மே 27
உலக நாடுகளில் தற்போது பாவனையில் உள்ள கொரோனாத் தடுப்பூசிகளால், இறப்பு வீதங்கள் பெருமளவில் குறைக்கப்படுகின்றன என்று அமெரிக்காவின் புளோரிடா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
குறிப்பிட்ட விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றில் இந்தத் தகவல் பெறப்பட்டுள்ளது.
பைஸர், மொடர்னா, ஜோன்சன் அண்ட் ஜோன்சன், சினோவெக் மற்றும் சைனோ ஃபோர்ம் ஆகிய தடுப்பூசிகளால் கொரோனாத் தொற்றாளர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.
எனினும் உலக நாடுகளில் தற்போது திரிபடைந்துள்ள கொரோனா வைரஸ்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய உயர்ந்த எதிர்ப்பு சக்திகள் பைஸர் தடுப்பூசிக்கு உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

## ஆடைத் தொழிற்சாலை ஊழியருக்கும் தடுப்பூசியில் முன்னுரிமை வேண்டும்

### பச்சிலைப்பள்ளி தவிசாளர் வேண்டுகோள்




கிளிநொச்சி, மே 27
கொரோனாத் தடுப்பூசி வழங்கலில் ஆடை தொழிற்சாலை ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை பொறுத்தவரை அதிக தொற்றாளர்கள் ஆடைத் தொழிற்சாலைகளில் இருந்தே அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இருந்தபோதும் நாட்டின் பொருளாதார நிலைமைகளைக் காரணம் காட்டி குறித்த தொழிற்சாலைகளை 14 நாள்களுக்கு கூட மூட முடியாத நிலை காணப்படுகின்றது. தொழில் வழங்குநர்களுடன் பேரம்பேசும் ஆற்றல் அற்ற தொழிலாளர்கள் தொற்று தமக்கும் ஏற்பட்டு விடும் என்ற பயத்துடனும், வேலைக்குச் செல்லாவிடின் தொழிற்சாலை நிர்வாகம் வேலையால் தம்மை நிறுத்தி விடும் என்கின்ற நிலையிலும் தொடர்ச்சியாக பயப் பீதியுடன் வேலைக்குச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது. அதை மாற்றி விருப்பத்துடனும், பாதுகாப்பாகவும் வேலை செய்யும் ஆற்றலை அதிகரிக்க வேண்டுமாயின் எதிர்வரும் நாள்களில் வழங்கப்பட உள்ள தடுப்பூசிகளில், ஆடை தொழிற்சாலை ஊழியர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதன் ஊடாக கொரோனாத் தொற்று சவாலுடன் பொருளாதார ரீதியான சவாலையும் சமாந்தர ரீதியில் எதிர்கொள்ள முடியும் - என்றார். (ப-13)

## ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நடமாடும் ஒட்சிசன் இயந்திரம்


### சுகாதார அமைச்சரின் யோசனைக்கு அனுமதி

கொழும்பு, மே 27
கொவிட் தொற்றால் மோசமடைந்த நிலைமையை அடையும் நோயாளர்களுக்கு ஒட்சிசன் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
நாடளாவிய ரீதியில் மாகாண மட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள 25 மருத்துவமனைகளில் மோசமடைந்த நிலைமையை அடையும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் விசேட உயர் சிகிச்சைப் பிரிவை நிறுவுதல், மருத்துவமனைகளுக்குத் தேவையான ஒட்சிசன் விநியோகத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அடையாளம் காணப்பட்ட தொலை பிரதேசங்களில் அமைந்துள்ள 15 மருத்துவமனைகளில் ஒட்சிசன் உற்பத்தி இயந்திரங்களை ஸ்தாபித்தல், ஒரு மாவட்டத்துக்காக 100 நடமாடும் மருத்துவ ஒட்சிசன் உற்பத்தி இயந்திரங்கள் வீதம் 25 மாவட்டங்களுக்கும் 2ஆயிரத்து 500 இயந்திரங்களை வழங்குவதன் மூலம் மருத்துவமனைகளில் சிலிண்டர்களில் ஒட்சிசன் வழங்கும் தேவையைக் குறைத்தல், மருத்துவ ஒட்சிசனுக்கு அதிகரிக்கும் கேள்விக்கான விநியோகத்துக்காக மாதாந்தம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் லீற்றர்கள் திரவ ஒட்சிசனை இறக்குமதிசெய்து போதுமானளவு இருப்பை நாட்டில் பேணுதல் போன்ற யோசனைகளுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)

## கொரோனாவால் உயிரிழந்தவர்களில் அதிகமானோருக்கு தொற்றாநோய்கள்

### தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் தகவல்

கொழும்பு, மே 27
நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தவர்களில் பலருக்கு, நாள்பட்ட தொற்றாநோய்கள் இருந்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சுகாதார அமைச்சின் ... நோய்கள் பிரிவின் பணிப்பாளருமான மருத்துவர் விந்தியா குமாரபெலி தெரிவிக்கையில்,
நாள்பட்ட தொற்றாநோய்களால் பாதிக்கப்பட்டோர் தொடர்பில் சுகாதார அமைச்சு விஷேட கவனம் செலுத்தி வருகின்றது.
தொற்றாநோய்களால் பாதிக்கப்பட்ட ... கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் நடமாடும் கிளினிக்குகள் மூலம் மருந்துகள் மற்றும் சிகிச்சைகளை வழங்குவதற்கான பொறிமுறையும் அமைக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களில் பெருமளவானோருக்கு தொற்றாநோய்களின் பாதிப்பு ...



...ஏதால் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கடன்களுக்கும் வங்கிகளால் சலுகை

## மத்திய வங்கி அறிவிப்பு

**கொழும்பு, மே 27**

**கொரோனாத் தொற்று நிலைமையால், வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களை மீளச் செலுத்துவதற்கான காலத்தை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இறுதி வரை நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.**

சகல அங்கீகாரம் பெற்ற வணிக வங்கிகள் மற்றும் விசேட வங்கிகளுக்கு இது தொடர்பான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மே மாதம் 15ஆம் திகதி வரை செயலிலுள்ள, செயலில் இல்லாத சகல கடன் வசதிகளுக்கும் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை மீளச் செலுத்த நிவாரண காலம். இவ்வாறான நிவாரண காலப்பகுதிக்கு அறவிடப்படும் வருடவட்டி 6.18 வீதம்.

தொழிற்படு மூலதனம், அடகு, தற்காலிக மேலதிக பற்றுகள் மற்றும் குறுங்கால நிதி வசதிகள் போன்றவற்றுக்கு இந்தச் சலுகை பொருந்தும். சலுகைக் காலத்தில் தண்ட வட்டி அறவீடு மற்றும் மேலதிக கட்டணங்களை அறவிட முடியாது.

5 லட்சம் ரூபாவுக்கும் குறைந்த பெறுமதியான காசோலைகளின் செல்லுபடியாகும் காலம் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடிப்பு. காசோலை மீளத் திரும்பல்கள் மற்றும் காசோலைக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய சகல அறவீடுகளையும் ஜூன் 30ஆம் திகதி வரை நிறுத்தவும்.

கடன் அட்டைகள் மற்றும் இதர கடன் வசதிகள் மீதான காலம் தாழ்த்திய கொடுப்பனவுக் கட்டணத்தை ஜூன் 30 ஆம் திகதி வரை அறவிடுவதை நிறுத்துவதுடன், முற்கூட்டியே செலுத்துவதற்கான கட்டண அறவீட்டையும் தவிர்க்கவும்.

ஜூன் மாதம் 21ஆம் திகதி வரை புதிய நிவாரணத்துக்கு, தகைமை வாய்ந்த வாடிக்கையாளர்கள் கோரலாம்.

ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் மீளச் செலுத்தல் சலுகைகளை தற்போது அனுபவிக்கும் வாடிக்கையாளர்கள் இந்த புதிய நிவாரணச் சலுகைக்கு தகைமை பெறமாட்டார்கள்-என்றுள்ளது. (ம-4)

# கைதிகள் 260 பேருக்கு விடுதலை

கொழும்பு, மே 27

வெசாக் தினத்தை முன்னிட்டு சிறைக்கைதிகள் 260 பேரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் விசேட மன்னிப்பின் கீழ் இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

விடுவிக்கப்படுபவர்கள் சிறிய தவறுகளுக்காக சிறைத்தண்டனை அனுபவித்து வருபவர்கள் என்று சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (ம-4)




## பேர்ள் கப்பல் விபத்தில்
# மீட்கப்பட்டவர்களில் ஒருவருக்கு தொற்று

கொழும்பு,மே 27

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்திலிருந்து மீட்கப்பட்ட இருவரில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீ விபத்துக்கு உள்ளான கப்பலில், காயமடைந்த இருவர் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டிருந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவனையில் சேர்க்க ப்பட்டனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-4)




# அம்பாறையில் கவனத்தை ஈர்த்த இரு சுவரொட்டிகள்

அம்பாறை, மே 27

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இருவேறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளன.

முன்னாள் அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான றிஷாத் பதியுதீன் தொடர்பாகவும், சுகாதார ஊழியர்கள் தொடர்பிலும் இச் சுவரொட்டிகளின் வாசகங்கள் காணப்படுகின்றன.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தொடர்பான சுவரொட்டியில் அவரது கைகளுக்கு விலங்கிடப்பட்ட அவரது படத்துடன் 'றிஷாத் பதியுதீனுக்கு நீதி வழங்கு' எனும் வாசகம் மும்மொழிகளிலும் காணப்படுகின்றது. குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களிலும், முக்கிய நகரங்களிலும் கடந்த சில தினங்களாக இச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

அதேவேளை "சுகாதார ஊழியர்களின் 10 கோரிக்கைகளை இப்போதாவது வழங்கு" என வலியுறுத்தும் மற்றொரு சுவரொட்டியும் பரவலாக பல பிரதேசங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கம் மற்றும் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் என்பவை சார்பில் இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ப-30)

# முஸ்லிம்கள் முகத்தை மூடுவதால் பயனில்லை

## கூறுகின்றார் அலி சப்ரி



கொழும்பு, மே 27

புர்கா அணிவது அரேபியக் கலாசாரம். எனவே இதனை முஸ்லிம் சமூகத்தினர் உணர்ந்து, புர்கா அணிவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களிடமிருந்து பிரிவதற்கு புர்காவும் ஒரு காரணம் என்று கடந்த அரசு கூறியது. இந்தப் பரிந்துரையே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. புர்காவை நான் எதிர்க்கின்றேன். புர்காவுக்கு தடை விதிப்பதற்கு அப்பால் புர்கா அணியக்கூடாது. தனது மதத்தை மற்றொருவருக்குக் கொண்டுசெல்வது முஸ்லிம்களுக்கு முக்கியமான ஒன்று. இதனை விடுத்து முகத்தை மூடிக்கொண்டு இருப்பது பயனற்றது - என்றார். (ம-4)

# பசுமைப் பொருளாதாரத்துக்கான வீதி வரைவு திட்டம் கையளிப்பு

கொழும்பு, மே 27

காலநிலை மாற்றங்களுக்கு பேண்தகு தீர்வுகளைக் கொண்ட பசுமை சமூக பொருளாதாரத்துக்காகத் திட்டமிடப்பட்ட வீதி வரைவு திட்டம் அமைச்சர்களால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலணியின் பிரதிநிதிகளுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் இந்தத் திட்டம் கையளிக்கப்பட்டது.

அது தொடர்பான ஜனாதிபதி ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: உரப்பாவனை, நிலம், முகாமைத்துவம், வளிமண்டலம், கைத்தொழில், மீள்பிறப்பாக்க சக்திவலு, நகர் மற்றும் சுற்றாடல் கல்வி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகளுடன் திட்டத்தை வரைவதற்கு ஜனாதிபதியால், குறித்த அமைச்சர்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சுக்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகளின் பின்னர் எதிர்கால செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. அதற்கான திட்டமே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது - என்றுள்ளது.

# 'பேர்ள்' தீயைக் கட்டுப்படுத்த இந்தியக் கப்பல்கள் விரைவு

தீப்பற்றியுள்ள 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலின் தீயைக் கட்டுப்படுத்த, இந்தியா 3 கப்பல்களை அனுப்பியுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 9.5 கடல் மைல் தொலைவில் திடீரென தீப்பிடித்த 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல், கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிடப்பட்டுள்ளது. அங்கு தீயணைப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

காலநிலை சீரின்மையால் தீ கட்டுக்குள் வரவில்லை. கப்பலிருந்து சிப்பந்திகள் மீட்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கப்பலின் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியா உதவிக்கரம் நீட்டியுள்ளது. அதற்கமைவாக கடலோரக்காவல் படையின் வைபவ், வஜ்ரா மற்றும் சமுத்ரபிரஹரி ஆகிய 3 கப்பல்களை இந்தியா அனுப்பியுள்ளது.

குஜராத் மாநிலம் ஹசிராவிலிருந்து கொழும்புக்கு அழகு சாதனப்பொருள்களுக்கான மூலப்பொருள்களை (இரசாயனங்கள்) ஏற்றி வந்த 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' என்ற சரக்குக் கப்பலே இவ்வாறு தீப்பற்றியுள்ளது என்று தெரிவிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவசெரிய சேவைக்கு கட்டுப்பாடு

கொழும்பு,மே 27
சுவசெரிய நோயாளர் காவு வண்டிகளில், மருத்துவமனைக்கு அழைத்துவரப்படும் கொரோனாத் தொற்றாளர்கள் குறைந்தது 30 நிமிடங்களுக்குள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவுறுத்தியுள்ளார்.

எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தொற்றாளர்களை மருத்துவமனைகளில் சேர்ப்பதை எவரும் நிராகரிக்க முடியாது. மருத்துவமனைகள் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும். மேலதிக சிகிச்சைகளுக்காக தொற்றாளர்களை வேறு மத்திய நிலையங்களில் சேர்ப்பதற்கும் இந்தச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# சதொசக்களை திறக்க அனுமதி



கொழும்பு, மே 27
**நாட்டில் நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் நாள்களில் அனைத்து சதொச விற்பனை நிலையங்களையும் திறக்குமாறு அதிகாரிகளுக்கு, அமைச்சர் பந்துல குணவர்தன ஆலோசனை வழங்கியுள்ளார்.**

மே மாதம் 30ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 7ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பிரதேச செயலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிவாரண பொதி விநியோகத்துக்காக, அனைத்து சதொச விற்பனை நிலையங்களையும் திறந்திருக்க வேண்டும். அத்துடன் நடமாடும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள வியாபாரிகளுக்குத் தேவையான பொருள்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்வதற்காகவும், சதொச விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டிருப்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-4)



# ஏற்றுமதித்துறைக்கு கூடுதல் சலுகைகள்

கொழும்பு, மே 27
நாட்டின் ஏற்றுமதித் துறை சார்ந்த சகலருக்கும் கூடுதலான சலுகைகளை வழங்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று அதன் தலைவர் சுரேஷ் டி மெல் தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றுக்கு எதிரான விதிமுறைகளுக்கு மதிப்பளித்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாட்டின் ஏற்றுமதி கடந்த ஏப்ரல் மாதத்தில் பெரும் வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. கடந்த வருடம் ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது 183 வீதம் அதிகரித்திருந்தது. இந்தக் காலப்பகுதியில் 789 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் இலங்கைக்குக் கிடைத்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# 686 பேர் கைது

கொழும்பு, மே 27
தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் 686 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் மாகாண எல்லைகளைக் கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்களில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)



# கொரோனாவைக் கட்டுப்படுத்த ஆஸ்திரேலியாவும் நிதியுதவி

கொழும்பு, மே 27
இலங்கையில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஆஸ்திரேலியாவும் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

அதற்கமைவாக 5.3 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படும் என்று ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் மரிஸ் பைன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, ஆஸ்திரேலிய அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. அதேவேளை இலங்கையில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக ஆஸ்திரேலியா வழங்கும் மொத்த நிதி உதவி 11.7 மில்லியன் ஆஸ்திரேலிய டொலர்கள் என்று இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் டேவிட் ஹோலி தெரிவித்துள்ளார். (ம-4)

# ஊடகவியலாளர்களுக்கு சிறப்பு தனிமை மையம்

கொழும்பு, மே 27
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படும் ஊடகவியலாளர்களுக்கு, பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி, சிறப்பு தனிமைப்படுத்தல் மையத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதேவேளை ஊடகவியலாளர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை மாவட்ட ரீதியாக நடைமுறைப்படுத்த வெகுஜன ஊடகத்துறை அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களம் ஆகியவை இணைந்து முன்னெடுத்துள்ளன என்று அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார். (ம-4)

# கொவிட் விசேட செயலணியில் முஸ்லிம்களுக்கு கதவடைப்பு

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மே 27
கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத்தால் நியமிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண கொவிட் 19 விசேட செயலணியில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்களின் நிலைப்பாடு என்ன என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; கொவிட் நிலைமைகள் தொடர்பாக பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்று தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநரால் விசேட செயலணி ஒன்று [illegible] யுள்ளது. பிரதான அமைப்பாளர் ஒருவரும், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கென தலா இருவருமாக மொத்தம் 7 பேர் இந்தச் செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும், இந்த 7 பேரில் ஒருவர் கூட முஸ்லிம் சமூகப் பிரதிநிதி இல்லை. தற்போதைய இந்த கொவிட் இடரில் அதிக பாதிப்புகளை முஸ்லிம் சமூகத்தவர்களும் சந்தித்துள்ளனர். முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் ஒன்றாவது இந்த விசேட செயலணியில் சேர்க்கப்படாமைக்கு காரணம் என்ன என்று கேட்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசுக்கு ஆதரவு வழங்கி வரும் முஸ்லிம் எம்.பிக்கள் கிழக்கு மாகாண ஆளுநரின் இந்த விசேட செயலணியில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாமை குறித்து என்ன சொல் [illegible]

# போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட இருவர் கைது

கொழும்பு, மே 27
கம்பஹா பகுதியில் இரண்டு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய போலி நாணயத்தாள்களுடன் கம்பஹா பெத்தியாகொட பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவரும், வெல்லம்பிட்டி மீதொட்டுமுல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கம்பஹா குற்றப்புல னாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது [illegible] தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, சீதுவ அம்பலன்முல்ல பகுதியிலுள்ள வீடொன்று சோதனைக்குட்படுத்தப்பட்டபோது அங்கிருந்து 2 இலட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்போது போலி நாணயத்தாள்களை அச்சுடுவது அதிகரித்து வருவதனால், பண கொடுக்கல் வாங்கல்களின் போது தங்களுக்கு கிடைக்கப்பெறும் பணம் போலியானதா இல்லையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்த [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியிலிருந்து கொரோனாக் கைதி தப்பியோட்டம்

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சி மருத்துவமனையிலிருந்து கொரோனாத் தொற்றுக்குள்ளான சிறைக் கைதி ஒருவர் தப்பி ஓடியுள்ளார். இயக்கச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் தங்கி சிகிச்சை பெற்றுவந்த வெளிமாவட்டம் ஒன்றைச் சேர்ந்த சிறைச்சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அந்தக் கைதி, தனக்கு நெஞ்சுவலி என்று தெரிவித்தமையால், கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையிலேயே அவர் நேற்றுக் காலை மருத்துவமனையிலிருந்து தப்பி ஓடிவிட்டார். அவரைத் தேடிக்கண்டறியும் நடவடிக்கையில், பொலிஸாரும் பாதுகாப்புத் தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். (த-6)

# பற்றியெரிகிறது கப்பல்

## கரைசேர்வனவற்றை விட்டுவைக்காத மக்கள்

கொழும்பு, மே 27



கொழும்பு துறைமுகத்துக்கு வட மேல் திசையில், 9.5 கடல் மைல் தூரத்தில், கொழும்பு துறைமுகத்துக்குள் நுழையும் நோக்குடன் நங்கூரமிடப்பட்டிருந்த சரக்குக் கப்பலில் சில நாள்களுக்கு முன்னர் பரவிய திடீர் தீயானது, கப்பல் முழுதும் நேற்றுப் பரவியது. எனினும், கப்பலின் முன் பக்கம் மற்றும் மத்திய பகுதியில் தீ ஓரளவு அணைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. கப்பலின் பின் பகுதியில் பரவ ஆரம்பித்த தீ தற்போது கப்பலின் முன் பகுதி வரை அனைத்து பகுதிகளையும் ஆட்கொண்டுள்ளது என்பது, நேற்றுக் காலை விமானப்படையின் பெல் 212 ரக ஹெலிகொப்டர் ஊடாக முன்னெடுத்த மேற்பார்வையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், நேற்றுப் பிற்பகல், கப்பலின் பின் பகுதிகளில் தொடர்ந்தும் பெரும் தீப்பரவலை அவதானிக்க முடிந்தது என்றும் அதனால், குறித்த கப்பலை நெருங்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, குறித்த கப்பல் முழுதும் தீ பரவியுள்ள நிலையில், கப்பலின் எண்ணெய் தாங்கிக்கு தீ பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு கப்பலின் எண்ணெய் தாங்கிக்கு தீ பரவினால் கப்பல் வெடித்து சிதறும் அபாயம் காணப்படுகின்றது என்று சமுத்திரவியல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர குறிப்பிட்டார்.

"கப்பலின் எண்ணெய் கசிவு இதுவரை அவதானிக்கப்படவில்லை. எனினும், இந்த தீப்பரவல் தொடர்ந்தால் எண்னெய் தாங்கி வெடித்து எண்ணெய் கசிவு ஏற்படலாம். அவ்வாறு இடம்பெற்றால் அது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அவ்வாறான நிலைமையை கையாள முன்னாயத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்." என்று அவர் தெரிவித்தார். இதேவேளை, கரையொதுங்கியுள்ள கொள்கலன்களில், இரசாயன பதார்த்தங்கள் இருந்துள்ளன. எனினும், கொள்கலன்களையோ அல்லது கடலில் மிதந்து வரும், கப்பலில் இருந்த பதார்த்தங்கள் என சந்தேகத்துக்கு இடமான எந்தவொரு பொருளையோ தொடவேண்டாம் என்று சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுரவும் மீனவத் திணைக்களமும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியிருந்தனர். எனினும், அதனைப் பொருட்படுத்தாது பொதுமக்கள் பொருள்களை வீடுகளுக்கு எடுத்து செல்கின்றமையை அவதானிக்க முடிந்தது. சமுத்திர பாதுகாப்பு அதிகார சபையின் ஆலோசனைப்படி, கப்பலின் பாகங்கள் அல்லது கொள்கலன்கள், திரவியங்கள் பெரும்பாலும் வெள்ளவத்தை முதல் களுத்துறை, வத்தளை திக் ஓவிட்ட முதல் சிலாபம் வரையிலான கடற்கரை பகுதிகளில் கரைதட்ட வாய்ப்புள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே அந்த கடல் பிரதேசங்களில் நேற்று முன்தினம் தொடக்கம் கடற்படையின் விசேட கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விசேட குழுவொன்று ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளது என்றும் 'நாரா' நிறுவனம் தெரிவித்துள்ளது. (த-இ)


# மரண அறிவித்தல்



பிறப்பு 01.12.1967 — இறப்பு 25.05.2021

**பாலசிங்கம் நகுலேஸ்வரன்**
(கிராம அலுவலர்)

பிறப்பு 29.12.1971 — இறப்பு 25.05.2021

**நகுலேஸ்வரன் சுனித்திரா**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் மயூரன் வீதி முழங்காவிலை வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் நகுலேஸ்வரன் (கிராம அலுவலர்) நகுலேஸ்வரன் சுனித்திரா ஆகியோர் கடந்த (25.05.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தனர்.

அன்னார்கள் டிசாந், நர்மதா ஆகியோரின் அன்புத் தாயும் தந்தையும் ஆவார்கள்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் இன்று (27.05.2021) வியாழக்கிழமை முழங்காவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.


## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### பதவியேற்றார்...

வார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் 34 வருடங்கள் சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள ராஜரத்னம், அரசின் சிரேஷ்ட சட்டத்தரணியாகவும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல், மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல், சிரேஷ்ட மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் மற்றும் பதில் சொலிஸிட்டர் ஜெனரல் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

கொழும்பு புனித பீட்டர் கல்லூரி மற்றும் றோயல் கல்லூரிகளில் கல்விகற்றுள்ள அவர், லண்டனில் உள்ள குயின்மேரி பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணி பட்டத்தைப் பெற்றுள்ளார். அதுமட்டுமன்றி, ராஜரத்னம் பிரிட்டன் மற்றும் வேல்சின் சொலிஸிட்டராவார். அவர் 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் செய்தார். சிவில் மற்றும் குற்றவியல் சட்டத்துறை குறித்து விரிவான அனுபவத்தை பெற்றுள்ள அவர், நீண்டகாலமாக உயர் நீதிமன்றங்களில் முன்னிலையாகி வந்துள்ளார். இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு உள்ளிட்ட சில அரச நிறுவனங்களில் ஆலோசகர் பதவியை வகித்துள்ள அவர், இலங்கை சட்ட ஆணைக்குழு மற்றும் சட்டக் கல்விப் பேரவை ஆகியவற்றின் உறுப்பினராவார். பதவிப்பிரமாண நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவும் பிரசன்னமாகி யிருந்தார். (த)

### காட்டிக் கொடுக்கும்...

னர். விமானப்படை மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் இணைந்து 'ட்ரோன்' கமராவைப் பயன்படுத்தி இந்தக் கண்காணிப்பில் ஈடுபட்டனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்தார். யாழ் நகரம், நல்லூர், அரியாலை மற்றும் குருநகர் ஆகிய பகுதிகளில் இக் கண்காணிப்பு இடம்பெற்றது. இதன்போதே 10க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட


# நினைவஞ்சலி

34ஆம் ஆண்டு



தோற்றம் 03.04.1930 — மறைவு 27.05.1987

**திரு.அ.முத்துராஜா**
(முன்னாள் உபதபாலதிபர், தொண்டைமானாறு)

22ஆம் ஆண்டு



தோற்றம் 25.12.1914 — மறைவு 02.01.1998

**திரு.மு.பொன்னம்பலம்**
(இளைப்பாறிய அதிபர்)

16ஆம் ஆண்டு



தோற்றம் 23.07.1916 — மறைவு 25.02.2005


**திருமதி பொ.இராசமணி**

காலங்கள் பல உருண்டோடினாலும்
கண்முன்னே நிற்குதய்யா உன் உருவம்
இன்றும் உம் சொல், செயல் பேசாதோர்
யாருமிலர் இவ் வையகத்தே
நீவிர் அன்று கூறிய வார்த்தைகள்
இன்றும் எம் கண்முன் நிழலாடுகின்றது
என்றும் உமை மறவா நிற்கும்
நின் அன்பார்ந்த உள்ளங்கள்!

"முத்து வாசா"

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் நாக விகாரையில், வெசாக் பண்டிகையை முன்னிட்டு இராணுவத்தினரால் வெளிச்சக்கூடுகள் அமைக்கப்பட்டு ஒளிரவிடப்பட்டுள்ளன. (த-20)

# அரச அலுவலர்களுக்கு மிகவிரைவில் தடுப்பூசி

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 27**

**அரச பணியாளர்களுக்கு விரைவில் தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் தடுப்பூசி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய கடிதம் சுகாதார அமைச்சு மற்றும் உள்நாட்டு அமைச்சுக்கு அனுப்பியுள்ளோம். அதன்படி மொத்த எண்ணிக்கையை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கோரிப் பெற்றுள்ளது.

அதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 3 ஆயிரத்து 200 அரச பணியாளர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் அரச அலுவலர்கள் தொடர்பான விவரங்களை உள்ளூராட்சி அமைச்சு பெற்றுள்ளது.

எனவே இந்த அரச பணிகளில் ஈடுபடும் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு மிக விரைவில் தடுப்பூசி வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

**கொரோனா**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமை சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இன்றுவரை 2 ஆயிரத்து 672 பேர் தொற்றுக்குள்ளாகியிருக்கிறார்கள் 34 இறப்புகள் பதிவாகியுள்ளன.

மாவட்டத்தில் 2 ஆயிரத்து 543 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 413 பேர் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பலாலி வடக்கு அந்தோனிபுரம் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அதேநிலையில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/47 கிராம அலுவலர் பிரிவில் 60 குடும்பங்களைக் கொண்ட கிராமத்தை தனிமைப்படுத்துவதற்குரிய சிபார்சு வழங்கப்பட்டுள்ளது.

சில கிராமங்களில் தொற்று நிலைமை சற்றுத் தீவிரமாகக் காணப்படுகின்றது. மக்கள் நடமாட்டம் மாநகரப் பகுதிகளில் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டாலும் கிராமப்புறங்களில் மக்கள் நடமாட்டம் அதிகரித்த நிலை காணப்படுகின்றது. இது மிகவும் அபாயமான காலகட்டம். எனவே பயணத் தடை காலத்தில் வீடுகளில் இருந்து தங்களுடைய வழமையான செயற்பாட்டை மக்கள் மேற்கொள்ள வேண்டும். கிருமித் தொற்றுக்கு மிகவும் பாதுகாப்பானது வீடுகளில் இருப்பதுதான்.

தொற்று நிலைமையானது சமூகத் தொற்றாக மாறுவதற்கு நாம் இடமளிக்காது பயணத் தடையை அனுசரித்தல் வேண்டும்.

**உதவி**

ஒவ்வொரு கிராமங்களிலும் நடமாடும் வர்த்தக செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலர் மற்றும் கிராம அலுவலர்களால் அறிவுறுத்தல் வழங்கப்படும். எனவே பொதுமக்கள் அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய வீட்டில் இருந்தவாறு தொலைபேசி ஊடாக தங்களுடைய கோரிக்கையை முன்வைத்தால் உரிய பொருள்களை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ள முடியும்.

அத்தோடு மாவட்டச் செயலகத்தில் அத்தியாவசிய தேவை தொடர்பில் தொடர்புகொள்வதற்கான இலக்கங்களும் நேற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, அதன் மூலமும் பொதுமக்கள் தமது அத்தியாவசிய தேவை தொடர்பான விடயங்களை அறிந்துகொள்ள முடியும்.

அத்தோடு, தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கான அரசின் இடர் கால உதவித் தொகையான 10 ஆயிரம் ரூபா நிவாரண உதவி தனிமைப்படுத்தப்பட்டுள்ளோர் அனைவருக்கும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

அரச உத்தியோகத்தர் வருமானம் மட்டம் பார்க்கப்படாமல் சுகாதார பிரிவினரால் சிபார்சு செய்யப்படும் அனைவருக்கும் அந்த உதவி வழங்கப்படுகிறது- என்றார். (த-26)

# அலுவலரும் மனைவியும் யானை தாக்கியே சாவு

யாழ்ப்பாணம், மே 27

பூநகரி ஜெயபுரத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நிர்வாக கிராம அலுவலரும் அவரது மனைவியும் யானை தாக்கியதனாலேயே உயிரிழந்துள்ளனர் என்று இறப்பு விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருந்தது. அவர்கள் எவ்வாறு இறப்புக்கு உள்ளாகினர் என்பதில் சந்தேகம் ஏற்பட்டிருந்த நிலையில், நேற்று நடத்திய விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவர்கள் யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் நயினாதீவைப் பிறப்பிடமாகவும் முழங்காவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பூநகரி பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலகர் பாலசிங்கம் நகுலேஸ்வரன் (வயது-52) மற்றும் அவரது மனைவி சுனித்தா (வயது-50) ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

கிராம அலுவலர் சம்பவ இடத்திலும் அவரது மனைவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட நிலையிலும் உயிரிழந்திருந்தனர்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார். (த-26)

# கொடிகாமம் பொலிஸில் தொற்று 9 ஆக உயர்வு



சாவகச்சேரி, மே 27

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேலும் இரு பொலிஸ் அலுவலர்களுக்குக் கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களுடன் மேலும் 4 பொதுமக்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்கு நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்ட ஆய்வு அறிக்கையின் பிரகாரம், தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பங்களுக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நான்கு பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இருவருக்கும் மட்டுவில், மந்துவில் ஆகிய பிரிவுகளில் தலா ஒவ்வொருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.


சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டிருந்தனர். அதன்படி ஏற்கனவே வெளியான அறிக்கையில் ஒன்பது பொலிஸாருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது மேலும் இருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று [illegible]

# சந்திர கிரகணம் நேற்று

கொழும்பு, மே 27

இந்த வருடத்தின் முதலாவது சந்திர கிரகணம் நேற்று இடம்பெற்றுள்ளது. நேற்றுமாலை 6.23க்கு தென்கிழக்கு வான்பரப்பில் தோன்றும் சந்திர கிரகணத்தை இரவு 7.20 மணி வரை இலங்கையில் பார்வையிட முடிந்தது என்று கொழும்பு பல்கலைக்கழக பௌதிகவியல் பிரிவின் வானிலை மற் [illegible] பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டின் பின்னர் முதலாவது சந்திர கிரகணம் நேற்று இடம்பெற்றுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இது முழுமையான சந்திர கிரகணமாக காட்சியளித்தது என்றும் தெரிவிக் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org